DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, VELLORE DISTRICT

| | |
|---|---|
| Name: காசிநாதன் | Father's Name: மாணிக்கம் |
| Village: திருப்பத்தூர் | Taluk: |
| Caste: | Calling: |
| Religion: | Age: 72 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 11.10.2022

**E.P. 53/2020 in O.S.14/1996 - PW1**

2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை–

1) மனுசொத்து எந்த ஊரில் அமைந்துள்ளது என்றால் இருணாப்பட்டு கிராமத்தில் அமைந்துள்ளது. மனுசொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் என்ன என்றால் சர்வே எண்.364/1, விஸ்தீரணம் 89 செண்ட் ஆகும். நான் அசல் வழக்கில் துரைசாமி கவுண்டருக்கு எதிராக தீர்ப்பாணை பெற்றேன் என்றால் சரிதான். மனுசொத்திற்கு எந்த திசையில் துரைசாமி கவுண்டர் நிலம் உள்ளது என்றால் மேற்கு பக்கம் உள்ளது. துரைசாமி கவுண்டருக்கு எதிராக நான் ஏற்கனவே நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம் தாக்கல் செய்தேன்.

2) துரைசாமி கவுண்டருக்கு எதிராக தாக்கல் செய்திருந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கினை நான் திரும்ப பெற்றுக்கொண்டேனா என்றால் ஆமாம் அவர் இறந்துவிட்டதால் திரும்ப பெற்றுக்கொண்டேன். நான் இந்த வழக்கினை யார் யாருக்கு எதிராக தாக்கல் செய்தேன் என்றால் ராமன், சின்னராஜி, திருப்பதி மற்றும் அவர்களது மனைவிகள் ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்தேன். ராமன், சின்னராஜி, திருப்பதி ஆகியோரின் மனைவிகள் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. நான் 2 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நான் தனியாக உரிமையியல் நீதிமன்றத்தில் தீர்ப்பாணை எதுவும் பெறவில்லை என்றால் சரிதான்.

3) ம.சா.ஆ.1 தீர்ப்பாணையானது துரைசாமி கவுண்டருக்கு எதிராக பெறப்பட்ட தீர்ப்பாணை என்றால் சரிதான். ம.சா.ஆ.2 ஆவணமும் துரைசாமி கவுண்டரால் தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்ட முதல் மேல்முறையீட்டு வழக்கின் தீர்ப்பாணை நகல் என்றால் சரிதான். ம.சா.ஆ.3 ஆவணமும் துரைசாமி கவுண்டரால் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டு வழக்கின் தீர்ப்பாணை நகல் என்றால் சரிதான். என் முன் காட்டப்படும் ம.சா.ஆ.4 புகார் மனுவானது ஒளிநகல் ஆவணம் என்றால் சரிதான்.

4) ம.சா.ஆ.4 புகார் மனுவினை எந்த தேதியில் அளித்தேன் என்றால் 30.01.2020 அன்று அளித்தேன். நான் சொல்லும் புகார் மனு தேதியானது ம.சா.ஆ.4 புகார் மனுவில் முதல் பக்கத்தில் மேல்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ம.சா.ஆ.4 புகார் மனுவில் ராமன், சின்னராஜி, திருப்பதி ஆகியோருக்கு எதிராக மட்டுமே புகார் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். மனுசொத்தில் எதிர்மனுதாரர்கள் அத்துமீறி நுழைந்ததாக சொல்வதை வேறு யாரெல்லாம் பார்த்தார்கள் என்றால் நானும், எனது மகனும் செல்லும்போது அவர்கள் அத்துமீறி நுழைந்தார்கள் நாங்கள் இருவர் மட்டும் தான் பார்த்தோம்.

5) ம.சா.ஆ.5 ஆவணத்தில் மனுவின் சாராம்சம் என்ற இடத்தில் மனுதாரரின் நிலத்தை பிரதி மனுதாரர் ஆக்கிரமிப்பு செய்துகொண்டு பிரச்சனை செய்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.5 ஆவணத்தில் எதிர்மனுதாரர்கள் மனுசொத்தை ஆக்கிரமித்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளதால் சுவாதீனம் கோரி நான் தனியாக ஏதாவது வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. இந்த நிலையில் எதிர்மனுதாரர்கள் நீதிமன்ற உத்தரவை அவமதிப்பு செய்திருப்பதாக கூறி மனு தாக்கல் செய்திருப்பது சரியல்ல என்றால் இல்லை நான் சரியாக தான் மனு தாக்கல் செய்துள்ளேன். ஏற்கனவே ம.சா.ஆ.5 ஆவணத்தின் கூற்றுபடி எதிர்மனுதாரர்கள் மனுசொத்தில் சுவாதீனத்தில் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருப்பதால் இந்த நீதிமன்ற அவமதிப்பு மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவுற்றது.